கிணறுகள் அமைக்கும்போது நீர் மட்டம் கிடைக்கும் வரை ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து வெளிப்படும் கற்கள், ஆழ்துளை கிணற்றுக்குள் தண்ணீர் மற்றும் நுரை போன்றவற்றைச் செலுத்தி கட்டுப்படுத்தப்படுகிறது. கம்ப்ரசர் இயந்திரத் திலிருந்து வெளிப்படும் எண்ணை போன்றவற்றினால் ஊழி யர்கள் வழுக்கி விழுந்துவிடாமல் இருக்க ஊழியர்களுக்கு காலணியும், பற்ற வைத்தல் மற்றும் சாணை பிடித்தல் போன்ற வேலைகளில் ஊழியர்கள் ஈடுபடும்போது ஊழியர் களின் கண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு பாது காப்புக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மற்றப்படி ஏற்படும் விபத்துக்களிலிருந்து காப்பாற்றுவதற்கு தலைக்கவசம், கை யுறை மற்றும் சீருடை எல்லா ஊழியர்களுக்கும் வழங்கப்படு கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மூச்சுக் குழாய் பாதிக்கப்பட்டதாக இதுவரையில். எந்தத் குற்ற தகவலும் இல்லை. இதுபோன்று பாதிக்கப்படுவதாக குறிப்பை அவர் கொடுப்பார் என்று சொன்னால் அது குறித்து அரசு நடடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: பேரவைத் தலைவர் அவர் களே, இதுபோன்ற ஊழியர்கள் இந்த நோயிலிருந்து தங் களைப் பாதுகாத்துக்கொள்ள தனியாக மருத்துவப்படி ஏதும் அளிப்பதற்கு அரசு முன்வருமா? அந்த ஊழியர்களை நிரந் தரம் ஆக்கி பணியிலே அமர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வாரி யத்தினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு அவர்களை நிரந் தரப்படுத்துவது போன்றவைகளை எல்லாம் செய்து வரு கிறார்கள்.

கன்னியாகுமரியில் அரசு பொது மருத்துவமனை.

*6500. **திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் தற்போது ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கும் மருத்துவ மனையை மீண்டும் அரசு பொது மருத்துவமனையாக மாற்றி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நட வடிக்கை என்ன?

1990 மே 3]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில். சமுதாய நல நிலையமாக இயங்கும் மருத்துவமனையை மாற்றி அமைக்கும் திட்டம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : தலைவர் அவர்களே, உலகச் சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் தற்போது இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை முந்தைய நம் கழக ஆட்சியில் அரசு மருத்துவமனையாக இருந்தது போல் மீண்டும் படுக்கை வசதி, அறுவைச் சிகிச்சை வசதி, பிரேதப் பரிசோதனை செய்யும் வசதி, கொண்ட அரசு பொது மருத்துவமனையாக ஆக்கும் திட்டம், பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே 1—6—1987லேயே அது சமுதாய நல நிலையமாக மாற்றப்பட்டிருக்கிறது. அங்கே 15 படுக்கைகளுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப உறுப்பினர்களுடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை.

*7795. திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ராஜாஜி மருத்துவமனையில் இதுவரை எத்தனை சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது ?

(ஆ) இது எதனால் இடையிலேயே நிறுத்தப்பட்டது ?